## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI

## M.C.O.P. No.21/2021

## P.W.2

Deposition of Witness for the Petitioner / Respondent Solemnly affirmed by of this Court on **21.03.2025** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | |
|---|---|---|---|
| Name | ஆறுமுகம் | Father Name : | முத்தையா |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | 63 |

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :**

நான் மனுவில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். வழக்கு விவரம் தெரியும். நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

விபத்து நடந்தது கிழக்கு மேற்காக செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் கண்மாய் வளைவு பகுதி என்றால் சரிதான். இறந்து போன நபர் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தவர் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் பெயர் விநாயக பாண்டி ஆகும். அந்த வளைவு ரோட்டில் இருசக்கர வாகனமும் காரும் நேருக்கு நேர் வரும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்திற்கும் காருக்கும் முன்பகுதியில் சேதம் ஏற்பட்டது. மேற்படி இருசக்கர வாகனமும் காரும் வளைவில் மோதும் போது தான் விபத்து ஏற்பட்டது. மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்த நபர் தான் இறந்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு பெருங்காயம் ஏற்பட்டது. இறந்து போன நபருக்கு தலைப்பகுதியில் பெருங்காயம் ஏற்பட்டது. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரும் பின்னால் அமர்ந்து வந்த நபரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால்

சரியல்ல. தலைக்கவசம் அணியாததால் தான் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு கார் டிரைவர் தான் காரணம் என்று மனுதாரருக்கு உதவ வேண்டுமென்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காயம்பட்ட இரண்டு நபர்களையும் தூக்கி பார்த்தேன். அவர்கள் மது போதையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.